# <u>சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் பாதாள சாக்கடை திட்டம்</u>

சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் பாதாள சாக்கடை திட்டம், ரூ.110.90 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு, தற்போது98 சதவீதம் பணிகள் நிறைவடைந்து 80 சதவீதம் பணிகள் மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

- **இந்த பாதாள சக்கடை திட்டமானது கீழ்கண்ட கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது.**

1. கழிவு நீர் சேகரிப்பு அமைப்பு - 103605 மீட்டர்
2. கழிவு நீர் உந்து குழாய் - 12102 மீட்டர்
3. ஆள்நுழைவாயில்கள் - 4090
4. வீடுகளுக்கு கழிவு நீர் இணைப்பு - 8100
5. கழிவு நீரேற்றும் நிலையம் - 11 (காரப்பாக்கம், முத்தமிழ் நகர், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், கரிசன்கேணி குளம், உழவர்கேணி குளம், கிழக்கு கடற்கரை இணைப்பு சாலை, ஸ்பிரிங் அவின்யூ, இடுகாடு, கிளாசிக் ஃபார்ம்).

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்** :

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் பணிகள் ரூ.8726.00 இலட்சத்திற்கு 30 மாதத்தில் பணி முடிக்க M/s VA Tech Wabag Ltd. Consortium with Sai Sudhir Infrastructure Ltd-க்கு 21.05.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 12.9.2013 அன்று தொடங்கப்பட்டு 11.03.2016 அன்று முடிக்க உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

**பணிகளின் தற்போதைய நிலை**:

1. தற்போது 98.50 சதவீதம் பணிகள் நிறைவடைந்து 80 சதவீதம் பணிகள் மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மீதமுள்ள பகுதிகளில் சோதனை வெள்ளோட்டத்தில் காணப்படும் சிலக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

2. இதுவரை இத்திட்டத்திற்கு ரூ.12574.40 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

3. இத்திட்டம் நிறைவேறியவுடன் சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் பகுதியில் சுமார் 48,941 மக்கள் பயன் பெறுவார்கள்.